# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
மாசி 24
ரபி. அவ். 27
புதன் (8-3-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 78
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# தமிழ் ஈழத்துக்கு தொடர்ந்தும் இரும்புத் திரைதானு?

## வியட்னும் பிரதமர் ஏன் இங்குவரவில்லை? தமிழ்ப்பேசும் உள்ளங்கள் கொதிப்பு

சென்றவாரம் இலங்கைக்கு நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த வியட்னும் பிரதமர் திரு. பாம்வான்டொங் அவர்கள் தமிழ் ஈழப்பிரதேசங்களுக்கு அழைத்து வரப்படாததேன்? முந்திய அரசாங்கம் தமிழ் ஈழப்பிரதேசங்களுக்கு இரும்புத்திரை போட்டு வைத்திருந்தது போலவே, இப்போதைய அரசும் இரும்புத்திரை போடுகிறதா, தமிழ் ஈழ மக்களின் உணர்வுகளை வெளிநாட்டுத் தலைவர்கள் அறிந்து கொள்ள முடியாதபடி வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்யப்படுகிறதா?

—இவ்வாறு குமுறிய உள்ளங்களுடன் தமிழ்ஈழ மக்கள்கேட்கிருர்கள்,

முந்திய சிறிமா அரசாங்கம், வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் தலைவர்கள், பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் எவரையும் தமிழ் ஈழப் பிரதேசங்களுக்குள் நுழையவிடாமல் இரும்புத்திரை போட்டுத்தடுத்து வந்தது. இந்தியாவின் இன்றைய வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாய் அவர்கள் முன்பு இலங்கை வந்திருந்தபோது அவராக விரும்பியும்கூட அவரை அன்றைய அரசு தமிழ்ஈழப் பிரதேசங்களுக்குள் நுழைய விடாமல் தடுத்தது தெரிந்ததே. இதுபோல வெளிநாட்டுப்பிரமுகர்கள் பலரும் தமிழ் ஈழத்துக்குள் நுழைய விடாது தடுக்கப்பட்டனர்.

தமிழ் ஈழத்துக்குள் வெளிநாட்டார் வந்தால், தமிழன் என்றோர் தனித் தேசிய இனம் இருப்பதையும், அந்த இனத்துக்குதனியானநாடும், மொழியும் கலை கலாசாரங்களும் இருப்பதையும், அவர்களது சுதந்திர உணர்வையும் வெளிநாட்டார் அறிந்து கொண்டுவிடுவார்கள் என்று அஞ்சியே முந்திய சிங்கள அரசு தமிழ் ஈழத்தை ஒரு தடை செய்யப்பட்ட பிரதேசமாக ஆக்கிவைத்திருந்தது.

இப்போது 'தர்மிஷ்டம்' பேசும் யூ.என்;பி. ஆட்சிபீடமேறியும் இந்த இரும்புத் திரை அறுபடுவதாகக் காணேம். தொடர்ந்தும் அதே பழைய சிங்கள அரசின் கொள்கையைத்தான் புதியசிங்கள அரசும் கடைப்பிடிக்கிறதாக தமிழ் மக்கள் கொதிக்கிருர்கள்.

அண்மையில் கொழும்பு வந்திருந்த வியட்னுமிய பிரதமர் திரு. பாம்வான்டொங் அவர்களை வரவேற்று மகிழ்வதற்கு தமிழ் ஈழமக்கள் ஆர்வமும் துடிப்பும் கொண்டிருந்த போதிலும், அவர் தமிழ்ஈழப்பிரதேசங்களுக்கு அழைத்துவரப்படவில்லை. அதே சமயம் அவர் கண்டிக்கு அழைத்துச் செல்லப் பட்டிருக்கிருர்.

வியட்னும் பிரதமரை வரவேற்கும் வாய்ப்பு தமக்கு கிடைக்காமற் போனது குறித்து சுதந்திரத்துக்கும் சோசலிசத்துக்கும் போராடிவரும் தமிழ் மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்,

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் வீரவியட்னுமின் தலைவரைச் சந்தித்து அவருக்கு தமிழ் ஈழமக்க

—4.ம் பக்கம் பார்க்க

### யாழ் பொலிஸ் நிலையத்தில் உள்ள ஆயுதங்கள்

யாழ் பொலிஸ் நிலையத்தில் 303 பொயின்ற் றைபிள்கள் 268ம், எஸ். எல். ஆர். 5ம், பொயின்ற் சொட்கண் 11ம், இயந்திரத்துப்பாக்கி 13ம், ரிவால்வர் 13ம், 15 ஆயிரம் துப்பாக்கிரவைகளும் இருக்கின்றன.

—சன்சோனி ஆணைக்குழு முன் கன்ஸ்டபிள் மனுவேல்பிள்ளை அகஸ்டீன் வெளியிட்ட தகவல்.

● சன்சோனி விசாரணையில் வெளிவந்த தகவல்கள்

# "அமிர்தலிங்கம் ஒரு கிணற்றுத் தவளை! அமிர்தலிங்கம் நாட்டை நாசமாக்குகிருர்! அமிர்தலிங்கமே வன்முறைகளை தூண்டிவிடுகிருர்!"

சன்சோனி ஆணைக்குழு 1977 ஆகஸ்ட் சம்பவங்கள் பற்றிய தனது விசாரணையை யாழ் பொது நூலகக் கட்டடத்தில் பெப்ரவரி 28ம் திகதியிலிருந்து மீண்டும் தொடர்ந்து நடத்திவருகிறது —ஆணைக்குழுமுன் நாள் தோறும் வெளியிடப்பட்டுவரும் தகவல்கள் இரத்தத்தை உறையவைப்பனவாகவும், அதே சமயம் ஆவணியில் நடைபெற்ற தமிழ் இனக்கொலையின் பின்னுலுள்ள பயங்கரசக்திகளை இனங்காட்டுவனவாகவும் இருந்துவருகின்றன. பொலிசார், பொறுப்பான அரசாங்க அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் துணிவுடன் மனம்திறந்து தங்கள் சாட்சியங்களை திரு, சன்சோனி அவர்கள் முன்னிலையில் எடுத்துரைத்துவருகின்றனர்.

பெப்ரவரி 28ம் திகதி சன்சோனி ஆணைக்குழு கூடிய போது தொடர்ந்துபொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சட்டநாதபிள்ளை சாட்சியமளித்தார். அப்போது அவர் யாழ் பொலீஸ் நிலைய பெரிய அதிகாரிகள் செய்திட்ட பொய்ப் பிரசாரங்களையும் சதி நடாகத்தையும் அம்பலப்படுத்திஞர். அப்போது அவர் கூறியதாவது:—

"ஆகஸ்ட் 16 அல்லது 17 ஆம் திகதி யாழ் பொலீசிலிருந்து கொழும்பு பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு யாழ் பொலிஸ் அதிபரின் பணிப்புரையின் பேரில் பொய்ச் செய்தியொன்று ரேடியோ மூலம் அனுப்பப்பட்டது. நாகவிகாரை தாக்கப்படுவதாகவும் யாழ் ரயில் நிலையத்தை தமிழர்கள் தாக்கித் தகர்க்கப் போகிருர்கள் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டது. இந்தச் செய்தி நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் கேட்டிருக்கும். இரண்டு மணிநேரம் கழித்து குறித்த செய்தி பொய்யானது என்று மற்றோர் செய்தி பொலீஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டது.

### துப்பாக்கி வழங்கப்படுவது மக்களை சுடுவதற்கே!

பொலிசாரைப் பொறுத்தவரையில் அவர்கள் இப்போது தமக்குத் துப்பாக்கி வழங்கப்படுவது பற்றிப் புதுமையான ஒரு கருத்தை வைத்திருக்கிருர்கள். மக்களை சுடுவதற்குத்தான் தமக்குத்துப்பாக்கிகள் தரப்படுவதாக அவர்கள் கருதுகிருர்கள்.

நான் கடந்த 18ம் திகதி சாட்சியமளித்த பின்னர், யாழ் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ரெறன்ஸ் பெரேரா என்னைச் சந்தித்து பொலிஸ்ரகசியங்களை எடுத்துக்கூறி, அழிக்க முனைந்தால், அதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? நீதி நிலைக்க வேண்டும்; அநீதியொழிய வேண்டும்" என்று நான் அவரிடம் சொன்னேன். இதன் பின்னர், பொலீஸ் இலாகாவுக்கு

### தமிழினத் தலைவர் மீது பொலீஸ் அதிகாரிகள் கக்கிய கொடு விஷம்!

பொலிசாரின் மரியாதையை கெடுத்து விட்டதாக என் மீது குற்றம் சாட்டினர்.

"நான் என்றும் பொய் சொல்லவில்லையே; மூன்று இனத்தவர்கள் பொலிசில் கடமையாற்றுகிறோம்; ஓர் இனம் இன்னோர் இனத்தை திட்டமிட்ட அடிப்படையில் நான் இடமாற்றம் செய்யப் பட்டேன்"

### தமிழன் என்றதனுல் தாக்கப்பட்டேன்

திரு. சட்டநாதபிள்ளையை அடுத்து யாழ் பொலிஸ் நிலை

—4-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விவசாயிகளை சிங்களர் தாக்கி உழைந்துவிற்ற பணத்தைபறித்தனராம்!

## இராணுவத்தினரின் உதவியுடன் சிங்கள வெறியாட்டம்!

வவுனியா பாவற்குளம் இரண்டாம் படிவத்தில் வசிக்கும் அறுநூறுக்கு மேற்பட்ட தமிழ் பேசும் குடும்பங்கள் அங்கு படும் அல்லல்களை வாரிக்குட்டியூரைச் சேர்ந்த திரு. ந. பாலகுரு சுதந்திரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு விபரிக்கிறார்:—

"எமது கிராமம் வவுனியாவில் இருந்து மன்னார் வீதி வழியாக வந்து 9வது மைல் கல்லில் திரும்பி அதாவது பூவரசன் குளத்தில் திரும்பி செட்டிகுளம் வீதி வழியாக வந்து வாரிகுட்டியூர் என்னும் சிங்களக்கிராமத்தினூடாக வந்து 6ம், 5ம் யூனிட்டாக அமைந்து இருக்கிறது. இங்கே 600க்கு மேற்பட்ட தமிழ் பேசும் குடும்பங்கள் வசிக்கின்றனர். இங்கேவைத்தியசாலை இல்லை, படிப்பதற்கு மகாவித்தியாலயம் இல்லை. படிப்பதற்கோ வைத்தியம் செய்வதற்கோ தமிழ் பேசும் மக்களாகிய நாம் மேற்குறிப்பிட்ட சிங்களக் கிராமத்தினூடாக செல்ல வேண்டும். அத்தோடு தமிழர்களாகிய எமக்கு பூவரசன் குளம் வீதியில் 1ம் மைல் கல்லுக்கருகில் பலருக்கு விவசாயக்காணிகள் உண்டு. நாம் விவசாயம் செய்ய இரவு பகலாக சிங்களவரைக் கடந்தே செல்ல வேண்டும்.

1977ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் தமிழர் அவ்வழியாக செல்லும் போது தமிழர்களோடு சிங்களக் காடையர்கள் ஏதாவது சுரண்டிய வண்ணமே இருந்து வந்தார்ாள். இதை தமிழர்கள் பொறுத்து பொறுமையாகநடந்துவந்தார்கள். எமது பொறுமையை பயன்படுத்தி சிங்களவர் மிஞ்சிவிட்டார்கள், 23. 2. 78ல் செட்டிகுளம் சென்று உழுந்துக்காசு எடுத்து வந்த தமிழர்களை தாக்கிப் பணத்தை பறித்தார்கள். கமத்துக்குச் சென்று வந்த தமிழ் வாலிபர்களையும், சைக்கில்களையும் தாக்கினார்கள். எமக்கு பஸ் போக்கு வரத்து கிடையாது. மேலும் நாம் பிரயாணம் செய்த வேன், கார் போன்றவற்றை தாக்கினார்கள்

இராஜேஸ்வரன், முத்தையா, பரமசிவன், உதயகுமார், சின்னராசா ஆகிய ஐவரிடமிருந்து உழுந்து விற்றபணம் மொத்தமாக ரூபா. 9470 பறிக்கப்பட்டதாகவும் உதயகுமாரின் சைக்கிளும் பறிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

சிங்களவர் இவ்வளவுக்கும் துணிந்ததுக்கு காரணம்!

வவுனியாவில் பெயர் பெற்ற செனவிரத்தின பாஸ் என்பவரின் கமம் வாரிகுட்டியூர் தட்டான் குளம் எனும் இடத்தில்இருக்கிறது. அக்கமத்தில் இராணுவத்தினர் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் சீருடையில்லாமல் இச் சிங்களக்காடையருடன்சேர்ந்து எமக்கு தீங்கிழைக்கின்றார்கள்.

இவற்றை முறையிடுவதற்கு பொலிசிடம் சென்றால் தாக்கப்படுவது தமிழர்களே, நீதி மறைந்து விடும் உண்மை மறைந்து விடும். இதை இப்படியே வளரவிட்டால் தமிழர்களாகிய நாம் எமது கிராமத்தை விட்டு குடிபெயர வேண்டிய நிலை ஏற்படலாம்என்பதை வேதனையுடன் அறியத்தருகிறேன். எனவே இது விடயத்தை எமது பா. உறுப்பினரும் ஏனைய தமிழ் தலைவர்களும் எமது பிரச்சனைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தித் தருமாறு மிகவும்தாழ்மையுடன் தமிழ் பேசும் மக்களாகிய நாம் வேண்டுகிறோம்.

25-2-78ல் சிவசுந்தரம் என்பவரின் கடைக்கும் தீமூட்டப்பட்டது.

# "சுதந்திர இயக்கம் உலகில் தோல்வியடைந்தது கிடையாது"

## காரைநகர் கருத்தரங்கில் பேச்சு!

காரைநகர் மேற்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளையின் ஆதரவில் கிளைத் தலைவர் திரு. செல்லப்பா வேலுப்பிள்ளையின் இல்லத்தில் 22-2-78 புதன் கிழமை மாலை திரு. பரஞ்சோதி தலைமையில் கூட்டணிக் கொள்கை விளக்கக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. ஏராளமானோர் பங்குபற்றிய இக்கூட்டத்தில் சுதந்திரன்ஆசிரியர் கோவை மகேசன், கூட்டணிகொழும்புக் கிளைத்தலைவர் திரு: ஈழவேந்தன், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் இராமநாதன் வரலாற்று நூலின் ஆசிரியருமான திரு. வைத்திலிங்கம், கூட்டணிக் கொழும்புக்கிளை துணைத்தலைவர் திரு. ஆறுமுகம், காரைநகர் மேற்கு கூட்டணிக்கிளைத் தலைவர் திரு. செல்லப்பா வேலுப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

திரு. வைத்திலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"தமிழ்மக்கள் இன்று அனுபவிக்கும் அடிமைத்தனம், யாரும் அவர்கள் மீது பலவந்தமாக திணித்த ஒன்று அல்ல: அது அவர்களாகவே தேடிக்கொண்ட சொத்தாகும் முன்பு நம்மை வழி நடத்திய தலைவர்கள் தமிழ் நாட்டைப்பற்றி அக்கறையின்றி தங்கள் வீட்டைப் பற்றி, தங்கள் சுய நலன் பற்றியே சிந்தித்து செயற்பட்டார்கள். வெள்ளைக்காரனுக்கும், சிங்களவனுக்கும் தமிழினத்தை விற்றார்கள். இன்றைய அடிமைத்தனம், அவர்கள் தேடி வைத்த சொத்து.

"மாட்டை, ஆட்டை வாங்கும் போதுகூட அது பற்றி பல ஆராய்ச்சி செய்யும் நாம், நாட்டை ஆளுகிற தலைவர்களைத் தெரிவு செய்வதில் மட்டும் அக்கறைகாட்டாமலிருந்தோம். சொந்த பந்தம், தெரிந்தவன் அறிந்தவன், பணக்காரன் என்பதற்காக, தேசபக்தியும் தேசவிசுவாசமும் அற்றவர்களை முற்காலங்களில் எமது பிரதிநிதிகளாக தெரிவு செய்தோம் அதன் பயனையே இன்று அனுபவிக்கிறோம்.

தமிழ் மக்கள் தனிநாடு பெறுமல் இந்த அடிமைத் தனத்திலிருந்து மீட்சிபெற முடியாது. விடுதலை இயக்கம் வேகமாக இயங்க வேண்டும். உலகில் எந்த நாட்டில் என்றாலும் விடுதலை இயக்கம் தோல்வியடைந்ததில்லை. வெற்றிக்கு காலம் எடுக்கலாம்—ஆனால் உறுதியுடன் நின்று போராடினால் இறுதியில் விடுதலை பெற்றே தீருவோம்"

திரு. ஈழவேந்தன் அடுத்துப் பேசும் போது, தமிழ் ஈழத்தின் வரலாற்றை சரித்திர மேற்கோள்களுடன் எடுத்து விளக்கினார். அவர் கூறியதாவது:—

"தமிழ் மக்கள் தங்கள் பழைய வரலாற்றை மறந்து விட்டார்கள். சிங்களவர்கள் எழுதிவைத்த பொய்களையெல்லாம் இன்று வரலாறு என்றுநம்பிஏமாறுகிறார்கள். தவறான, தப்பான தமிழனைத் தாழ்த்துகிற கட்டுக் கதைகள் எல்லாம் வரலாறாக்கப்பட்டுபாடசாலைகளில் தமிழ்ப்பிள்ளைகளிடத்தில் திணிக்கப்படுகிறது. இந்நிலையில் இலங்கை ஒரே நாடு என்ற சிந்தனையிலிருந்து நாம் விடுபட வேண்டும் படித்த பலவற்றை நாம் மறந்து படிக்கத்தவறியவற்றை படிக்க வேண்டும். இழந்த தமிழ் நாட்டை மீண்டும் அமைக்க வேண்டும். இதற்கான தீர்ப்பை 1977 பொதுத் தேர்தலில் தமிழ்மக்கள் தந் [illegible] முடிவான முடிந்த முடிபு, இதையாராலும் மாற்ற முடியாது. சலுகைகளைநம்பி இந்தப்புனிதமான தமிழ்ஈழ இலட்சியத்துக்கு துரோகம் செய்ய நினைப்பவர்களை தமிழ் சமுதாயம் மன்னிக்காது" என்றார்.

திரு. கோவை மகேசன் தமது உரையில் கூறியதாவது:—

"உலகில் எந்த ஒரு விடுதலை இயக்கத்திலும் பகுதி நேர அரசியல்வாதிகளைக் காணமுடியாது. பகுதிநேர பொழுதுபோக்கு அரசியல் நடத்தி நாம் நமது தாயகத்தின் விடுதலையைப் பெற முடியாது, ஆனால் பகுதிநேர அரசியல்வாதிகளையும் எங்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி இயக்கத்திலேதான் பார்க்கிறோம். இயக்கம் முன்னெடுத்துச்செல்லப்பட வேண்டுமானால், முழுநேர ஊழியர்கள் இயக்கத்துக்கு தேவை. பொறுப்பை ஏற்றிருக்கும் தலைவர்கள் முதலில் முழு நேர ஊழியர்களாகி வழிகாட்ட வேண்டும். பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத் போன்றவர்கள் திருமணமே செய்யாமல், தங்கள் வாழ்க்கையையே முழுமையாக அர்ப்பணித்து தங்கள் நாட்டை விடுவிக்கப்போராடுகிறார்கள்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி இயக்கம், அடிமட்டத்திலுள்ள சாதாரணமக்களுடன் நெருங்கிய உறவு

—4-ம் பக்கம் பார்க்க

திமி நாடகம்

அலஸ்

## சொல்லுபல்லக்கு

கந்தன்: என்ன முத்தண்ண எலக்சனுக்கு முந்தி எட்டுருத்தல் உணவு எண்டவையள் இப்ப அரிசியிலேயும் கைய வைச்சிட்டினம்.

முத்து: அதுதானே இப்ப நெல்லு விநியோகம் செய்ய ஒரு திட்டம் இருக்குதாம். அப்ப உமி, தவிடு, கல்லு எல்லாம் சேர்த்து எட்டுருத்தல் வரும்தானே.

கந்தன்: இன்னும் கொஞ்சம் போனால் விதை நெல்லை மாத்திரம் குடுத்து விதைச்சுச் சாப்பிடுங்கோ, எல்லோரும் தமக்கு வேண்டிய அரிசியை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளவேணும் எண்டு சொல்லுவினம் போல.

முத்து: வர வரமாமியார் கழுதைபோல எண்டமாதிரித்தான் போகுது. தம்பி வெளிநாட்டுவிவகார அமைச்சரைத் தவிர மற்றைய அமைச்சர்மார் வெளிநாடுகளுக்குப் போகமாட்டினம் எண்டு சொல்லிச் சினம். இப்ப இவையளும் பழைய அரசாங்கம்மாதிரி வெளிநாடுகளுக்கு எல்லாரும் காவடி எடுக்க வெளிக்கிட்டிட்டினம்;

கந்தன்: ஏன்? பத்திரிகைச் சுதந்திரத்தில கைவைக்கமாட்டம் எண்டவையள் இப்ப இந்தச் செய்தி போடக் கூடாது. அந்தச் செய்தி போடக் கூடாது எண்டுவேற சட்டம் கொண்டுவருகினம்.

முத்து: தம்பி மா புளிக்கிறது அப்பத்துக்கு நல்லம் எண்டமாதிரி இப்பிடி யெல்லாம் நடக்கிறதும் ஒரு வகைக்கு நல்லம்தான். மக்கள் இவையள இனம்கண்டு கொள்ளுவினம். ஏன் இப்பையே யூ. என். பி. ஆட்சி எண்டால் என்ன வெண்டு நல்லாய் விளங்கிக்கொண்டினம்,

கந்தன்: அதுதானே அண்ண யூ. என். பி. ஆட்சிக்குவந்தால்தான்! சாமான் எல்லாம் விலைமலியும் எண்டில்லே எங்கடை ஆக்கள் மனக்கோட்டை கட்டிச்சினம் இப்ப என்னடா எண்டு பார்த்தால் விலைகள் எல்லாம் நினைச்சுப்பார்க்க முடியாத அளவுக்கு விஷம் போல ஏறியிருக்குது.

முத்து: தம்பி எப்பவும் இக்கரைக்கு அக்கரைபச்சைதான் முந்தின ஆட்சிகாலத்தில் யூ. என். பி. ஆட்சிவந்தால் நல்லது எண்டு சனங்கள் நினைச்சுதுகள்: இப்ப சிறிலங்கா கட்சி ஆட்சி வந்தால் நல்லம் எண்டு நினைக்குதுகள். இந்த நினைப்பு எல்லாம் சிங்களவங்களுக்குத்தான் சரி தமிழர்களுக்கு வரப்படாது. தமிழர்களுக்கு இரண்டும் ஒரே மாதிரியான ஆட்சிதான் என்கிறதை மனதில வைச்சுக்கொள்ள வேணும்.

கந்தன்: எதையோ கதைச்சு எங்கையோ வந்திட்டம் மொத்தத்தில இந்தஆட்சி 'சொல்லுப் பல்லக்கு தம்பி கால் நடை, எண்டமாதிரித் தான் நடக்குது இல்லையா?

லாலா சோப்

ஸ்தாபனத்தாரின்

அன்பான வேண்டுகோள்

பாடசாலைப்பிள்ளைகளின் நன்மைகருதி 5-ம் வகுப்புக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு இலவசமாக வாய்ப்பாட்டுமட்டைகள் வழங்குவதற்கு முன்வந்து இருக்கிறோம். ஆகவே, தயவு செய்து ஒவ்வொரு தலைமை ஆசிரியர்களும் தங்களின் பாடசாலை (லெட்டர் கெட்) காகிதத்தில் எத்தனை வாய்ப்பாடு மட்டை தேவை என்பதை அறியத்தரவும். இப்பிரசுரத்தை எங்களுடைய தமிழ் உயிர் பத்திரிகையாகிய சுதந்திரனில் வெளியிட்டு உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

அனுப்ப வேண்டிய முகவரி:

பொன், வன்னியசிங்கம்,
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'எந்த சபலத்துக்கும் ஆட்படாது விடுதலையொன்றே குறிக்கோளாக இருப்போம்!'

## திருகோணமலையில் வெள்ளம்போல் திரண்ட தமிழர் கூட்டத்தில் தமிழீழ முதல்வர் அமிர்தலிங்கம் உறுதியுரை!

எத்தனை இனக்கலவரம் வந்தாலும், எத்தனை பயமுறுத்தல்கள் விடப்பட்டாலும், உயிர்ப்பலிகள் கொடுக்க நேர்ந்தாலும், தீரர்கள் கோட்டமாம் திருகோணமலை வாழ் தமிழ்மக்கள், தந்தைசெல்வா உருவாக்கித் தந்துவிட்டுச்சென்ற தமிழ்ஈழ இலட்சியத்திலிருந்து கிஞ்சிற்றும் பின்வாங்கிவிட மாட்டார்கள்; கூட்டணிக் கொள்கைப் பாசறையிலிருந்து அவர்களை எவராலும் பிரித்துவிட முடியாதென்பதை திருகோணமலை முற்றவெளி மைதானத்தில் 25-2-78 மாலை நடைபெற்ற கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் ஆர்வமும் உணர்ச்சியும் அலைபுரளத் திரண்டிருந்த வெள்ளம்போல தமிழர் கூட்டம் எடுத்துக்காட்டியது.

பல்வேறு துன்பங்களையும், நெருக்கடிகளையும்திருகோணமலை தமிழ்மக்கள் தொடர்ச்சியாகஅனுபவித்த பின்னர், நீண்டகாலத்திற்கு பிறகு நடைபெற்ற கூட்டணியின் இந்த அரசியல் கூட்டத்தில் பெருந்திரளான பெண்களும் துணிச்சலுடன் வந்து கலந்துகொண்டது திருகோணமலைத் தமிழ்மக்களின் ஆழமான இலட்சியப் பற்றுக்கு சான்ருக விளங்கியது.

அதுமட்டுமன்றி — எந்தத் திருகோணமலையில்அன்றொருநாள் ஒரு சிலர் தமிழினத் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியை எரிக்கத் துணிந்தார்களோ அதே திருகோணமலை மண் ஒன்று திரண்டு தலைவர் அமிர்தலிங்கத்தை அன்போடு கட்டித் தழுவி, மலர்மாலைகளால் அவரை திக்குமுக்காட வைத்து மலர்க்கிரீடம்சூட்டி தமிழஈழத்தின் முதல்வரை வாஞ்சையோடு கௌரவித்த காட்சி பார்த்தோரை உணர்ச்சி வசப்படவைத்து புல்லரிப்பை ஏற்படுத்தியது. திருகோணமலை மக்களின் இந்த அன்பு வெள்ளத்துள் மூழ்கிய திரு. அமிர்தலிங்கம் மிகவும் உணர்ச்சியுடன் காணப்பட்டார்.

அதுமட்டுமன்றி அனுராதபுரம் பொலீஸ் அதிபர் திரு. லியனகே அவர்களால் ஆவணி கலவரத்தின் போது திரு. அமிர்தலிங்கத்துக்கு சூட்டப்பட்ட "கேர்ணல்" பட்டத்தையும் திருகோணமலை தமிழ்மக்கள் சார்பாக உப்புவெளி கூட்டணிக் கிளைத்தலைவர் திரு. பத்மநாதன் முறைப்படி திரு. அமிர்தலிங்கத்துக்கு சூட்டி மகிழ்ந்தார்.

### துரைரத்தினம்

அமரர் இராஜவரோதயம் அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:—

கூட்டணித் தலைமைப் பீடம் குறித்து எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. தலைமைப் பீடம் இலட்சியத்தை மறந்து போகாது.

இலட்சியத்தை நிறைவேற்ற பல மார்க்கங்கள் உள்ளன. இப்பொழுது ராஜதந்திர ரீதியில் அணுகும் முறைதான் கையாளப்படுகின்றது.

குருவும், சீடனும் கதை பலருக்குத் தெரியும். குருவைப் பின்தொடர்ந்து சீடன் சென்முன். போகும் வழியில் ஆறு குறுக்கிட்டது. நீரில் நடந்து போவோம் என்று குரு சொன்னர். சீடன் மறு பேச்சின்றி குருவைப் பின்பற்றி ஆற்றின் மீது நடந்து சென்முன். ஆனல் குருவிற்கோ நீரில் நடந்து செல்கையில் நீரில் மூழ்கி விடுவேனே என்ற சந்தேகம் வந்துவிட்டது. குரு நீரில் மூழ்கிவிட்டார். ஆனல் சீடனே குருவின் சொல்லை நம்பி நீரின் மேல் நடந்து சென்று அக்கரை சென்முன்.

"அதுபோல் தலைமைப் பீடம் இடைவழியில் நிலைகுலைந்து போகலாம். ஆனல் தலைமைப்பீடத்தின் இலட்சியப் பாதையில் நம்பிக்கை இழக்காது செல்லும் தொண்டர்கள் இலட்சியத்தை அடைந்தே தீருவர்.

### சம்பந்தன்

திருமலை பா. உ. திரு. சம்பந்தன் பேசுகையில் கூறியதாவது:—

நான் திருகோணமலை மண்ணுக்கு உரியவன். திருமலை மண் எனக்கு உரியது. இந்தத் தூய எண்ணத்துடன் தான் நான் பணியாற்றுகின்றேன்.

நான் வகுப்புவாதி அல்லன். வகுப்புத் துவேஷம் எனது கொள்கையல்ல. தமிழினம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதே எனது இலட்சியம். அதற்காகக் கொள்கையைக் கைவிடாது உழைப்பேன்.

எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் நான் சேவை புரிவேன்.

ஆனல் ஒரு வேண்டுகோள், எனக்கு வாக்களிக்காத தமிழ் முஸ்லிம் மக்கள் இனியாவது எமது இன விடுதலைக்கு எம்முடன் இணைந்து போராட முன்வரவேண்டும்.

### சூசைதாசன்

மன்னர் பா. உ. திரு. பி. எஸ் சூசைதாசன் பேசுகையில் கூறியதாவது:—

மாவட்ட மந்திரிப் பதவியை நான் ஏற்கமாட்டேன். மாவட்ட மந்திரிப் பதவி ஒரு அடிமைச் சின்னம்.

அரசன் ஒருவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்முன். அவன் கண்ணில் நாய்க்குட்டி ஒன்று தென்பட்டது. அதனைப் பிடித்து அரண்மனைக்குக் கொண்டு வந்து வளர்த்தான்.

காட்டில் கிடந்த நாய்க்குட்டி அரண்மனையிலே கொழு கொழு வென்று வளர்ந்து வந்தது.

இன்னெரு நாள் வேட்டைக்குச் செல்லும்பொழுது இந்த நாயையும் கொண்டு போனன். சங்கிலியில் கட்டப்பட்டு இருந்த நாயை அரசன் சிறிது நேரம் அவிழ்த்துவிட்டான். அங்குமிங்கும் ஓடித் திரிந்த நாயை ஓநாய் ஒன்று கண்டது, அரண்மனை நாய் காட்டு ஓநாய்க்குத் தன் கதையைச் சொல்லியது.

இறைச்சி, பால், முட்டை நேரம் தவருது கிடைக்கின்றது. அதுதான் இப்படிக் கொழு, கொழு என்று வாழ்கின்றேன்.—இப்படிச் சொன்னது அரண்மனை நாய்.

ஓநாயோ அப்படியா! உனது கழுத்திலே சிவப்பாக ஒரு வட்டம் தெரிகின்றதே அது என்ன? என்று கேட்டது.

"ஓ! அதுவா! சங்கிலியினல் எனது கழுத்தில் கட்டித்தான் அரண்மனையில் வளர்க்கிருர்கள் என்றது அரண்மனை நாய்.

சங்கிலியினல்கட்டித்தான் இறைச்சி, பால், முட்டை பஞ்சுமெத்தை எல்லாம் உனக்குத் தருகின்ருர்கள் என்று ஓநாய் கேலி செய்தது.

இப்படி என்னல் வாழ முடியாது. நினைத்த நேரம் துள்ளித்திரிய வேண்டும். சாப்பிடவேண்டும் — அந்த வாழ்வுதான் எனக்கு வேண்டும் என்றது ஓநாய்.

அரண்மனை நாயின் கழுத்தில் போடப்பட்ட சங்கிலி வளையம்தான் இந்த மாவட்ட மந்திரிப்பதவி.

தொகுதி அபிவிருத்திக்கு 10 லட்சம் ரூபாயைக் கொடுத்துவிட்டு வெளியூரிலிருந்து 10ஆயிரம் பேரைக் குடியேற்று என்று கூறும் போது தலையாட்டிப் பொம்மையாக இருக்க வேண்டிய நிலைமை மாவட்ட மந்திரிக்கு வரும் இந்நிலையை நான் ஏற்கமாட்டேன்.

### அமிர்

திரு. அ. அமிர்தலிங்கம் தனது பேச்சில் கூறியதாவது:—

'தமிழினத்தின் அடிப்படைப்பிரச்சினைகளை சிங்களக்கட்சிகளால் என்றுமே தீர்த்துவைக்க முடியாது. சமாதானத்திற்கு ஆயத்தமாக இருப்பதாகக் கூறிக்கொண்டே மறுபுறம் சிங்களத்தலைவர்கள் சவால் விட்டவண்ணம் இருக்கின்றனர். ஆனல் இனியும் தமிழ்த்தேசிய இனம் அடிமையாக வாழ முடியாது. எனவே சகலரும் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்காக உழைக்கத் தயாராக வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை, தாயகமான தமிழ் ஈழத்தை மீட்டெடுக்கும் கருவியாகவே பயன்படுத்த விரும்புகிறேன். இப்பதவியில் இருக்கும்வரை வெளிநாட்டுத் தூதுவர்கள் அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதை விடுத்து நாம் பதவி மோக மயக்கத்தில் இருக்கவில்லை,

தந்தை செல்வாவின் அடிச்சுவட்டையே பின்பற்றுகிருேம். நாம் என்றுமே தமிழினத்திற்கு துரோகமிழைக்க மாட்டோம். இன்றைய நிலையில் ஆளுங்கட்சியினருக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்துள்ளோம். இதை மதித்து ஆட்சியாளர்கள் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும். இல்லாவிட்டால் எப்படி நடந்துகொள்ள வேண்டியிருக்கும் என்பதை நாம் அறிவோம்.

இளைஞர் சமுதாயம் மிகக் கட்டுக்கோப்புடன் நடக்க வேண்டும். அவர்களை நாம் வழிநடத்தி, எமது தாயகத்தை மீட்டெடுக்கும் புனித பணியில் தீவிரமாக ஈடுபடுவோம். எந்தவொரு சலனமும், சபலமும் எம்மை விடுதலைப் பாதையிலிருந்து வேறு திசைக்குத் திருப்பி விட முடியாது.

### இராசலிங்கம்

உடுப்பிட்டி பா. உ. திரு. த. இராசலிங்கம் பேசுகையில், ஒரு இனத்தின் ஆளும் அதிகாரம் அந்த இனத்தின் கையிலிருந்தால்தான் அந்த இனம் சர்வதேச அரங்கில் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்ருர். மற்றும் பலர் பேசினர்.

---

## இந்த வாரம் இவர் கருத்து!

### இயக்க அமைப்புக்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?

கேள்வி: கூட்டணிக்கிளைகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டுமென்று கருதுகிறீர்கள்? இப்போது அமைக்கப்படும் முறையில் ஏதாவது குறைகள் காணப்பட்டால் மனம் திறந்து சொல்லுங்கள்!

பதில்: இயக்க எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன்.

"கடந்த ஆட்சிக்காலத்தில் ஏழாண்டுகளாக தமிழ் ஈழத்தில் உத்தியோகம், கூட்டுறவுத்துறையில் பதவிகள், சலுகைகள் போன்ற அனைத்தும் சுதந்திரக்கட்சி ஏஜண்டுகளால் வழங்கப்பட்டது. அப்போது விடுதலை அணியுடன் நின்றவர்கள் எந்த சலுகைக்காகவும் இன்றி ஒரே இலட்சிய நோக்குடன் செயல்பட்டார்கள்; தூயவர்கள் அவர்கள்.

ஆனல் இன்று நடப்பது என்ன? அனைத்து சலுகைகளும் நமது பா. உக்கள் மூலம் வழங்கப்படுகிறது. இது வரவேற்க வேண்டியதுதான். ஆனல் அது தந்தவிளைவு? இன்று தமிழர்கூட்டணியில் சேருவதன் நோக்கம் விடுதலை இலட்சியத்துக்காக அல்ல உத்தியோகம் பெற, சலுகைகளை அனுபவிக்க என்ற எண்ணம் குறிப்பாக அனைவரிடமும் (இளைஞர்களிடமும்) ஏற்பட்டுவிட்டது: சலுகைகளால் உரிமை வேட்கை பாதிக்கப்படும்தான். தேய்வடையும்தான். ஆனல் எம்மால் பொறுக்க முடியுமா? தேய்வது கழுதையல்ல உயிரான நம் இலட்சியமல்லவா?

இன்று தமிழர் கூட்டணி கிளைகள் புனரமைக்கப்படுகின்றன. யார்முன் நிற்கிருர்கள். எவர் பின் தள்ளப்பட்டார்கள்என இனம்காணவேண்டியது அவசியம்முன்னுக்கு நிற்பவர்கள் நாளை சலுகைகள் ஐ. தே. க. கிளை அமைப்பாளர்மூலம் வழங்கப்படுமென்ருல் பச்சைகுத்த தயங்கமாட்டார்கள். இவர்களுக்கு விடுதலை இலட்சியமல்ல, அதன் பரமவிரோதிகள் இவர்கள். விடுதலைக்கருத்துக்கள் பரவவேண்டும் என்பதிலும் இவர்களுக்கு அக்கறை இல்லை என்பதை கருத்தரங்கு ஒன்று நடத்த முயன்றபோது அறிந்தேன் விடுதலைக் கருத்தரங்கு அவர்களுக்கு முக்கியமல்ல எம். பி. உடன் அறிமுகமாகி சலுகைபெறுவதுதான் இவர்களது குறி;

இவர்களைப்போன்ற பத்தாயிரம் பேரைத் திரட்டுவதை விட இலட்சியத்திலே அந்தரங்கசுத்தியான பத்துப்பேர் எவ்வளவோ மேல். வெளிப்படையான துரோகிகளை விடஇவர்கள்தான் பாரதூரமான விளைவை ஏற்படுத்துவார்கள். எனவே பா. உக்கள் விழிப்பாக இருந்து சந்தர்ப்பவாதிகளைக் களையெடுக்கவேண்டும் விடுதலை இலட்சியத்திலே 'குறி'யாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தலிங்கம் ஒரு கிணற்றுத் தவளை ...

—1:ம் பக்கத் தொடர்

யத்தைச் சேர்ந்த கன்ஸ்டபிள் செல்லையா நடராசா சாட்சியமளிக்கையில், யாழ் பொலிஸ் நிலையத்துக்கு வழமைபோல வேலைக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பொலிஸ்காரரான தம்மையே நாக விகாரைச் சந்தியில் வைத்து இலக்கம் அணியாத சில பொலிசார் குண்டாந்தடிகளால் தாக்கியதாகவும் தாம் ஒரு பொலிஸ்காரனாக இருந்தும் தமிழன் என்ற காரணத்தினாலேயே ஏனைய பொலிசாரால் தாக்கப்பட்டதாகவும், இதுபற்றி மேலிடத்துக்கு புகார் செய்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் கூறினார்.

## தமிழரைக்கொல்ல வேண்டும்

கலவர நேரத்தில் கல்கமுவையில் கடமையாற்றிய மலேரியாத்தடுப்பு இயக்க வெளிக்கள அதிகாரி திரு. கனகரத்தினம் செல்வராசா தமது சாட்சியத்தில் கூறியதாவது!

“கலவரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து எனது எட்டு மாத கர்ப்பிணி மனைவியை கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு, நான் கல்கமுவ பொலிசில் அடைக்கலமாக தங்கியிருந்த சமயம் எனது வீடும்சொத்துக்களும் எரிக்கப்பட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அப்போது அதைக்கேட்டு விரக்தியால் எனக்கு சிரிப்பு வந்தது. நான் சிரித்தேன். அப்போது ஒரு பொலிஸ்காரர் ‘ஏய்குரங்கு, ஏன்சிரிக்கிறாய்? உங்களுக்குதந்தது போதாது தமிழரையெல்லாம் கொல்ல வேண்டும்; உங்களுக்கு அதிகமாக இடம்தந்து தாட்சண்யம் காட்டி விட்டோம்’ என்றார்; அப்போது அங்கு சுமார் 400 தமிழ் அகதிகள் இருந்தனர்”

## சிங்களவர் என்றதும் அடிப்பதை நிறுத்தினர்

இதையடுத்து சாட்சியமளித்த வேம்படி மகளிர் கல்லூரியின் 16 வயது மாணவி செல்வி திலகா ஜானகி கலவரநேரத்தில் தாம் காட்டிய வீரத்தை ஆணைக்குழுமுன் எடுத்துக் கூறியபோது கேட்டோரை அது புல்லரித்திடவைத்தது.

அவர் கூறியதாவது:-

“ஆயுதம்தாங்கிய பொலிசார் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எங்கள் வீட்டுக்குள் பலவந்தமாகப் புகுந்து என அண்ணன் ராஜ்குமாரை றைபிள் பிடியால் அடித்தார்கள். இதைப் பார்த்த நான் பொறுக்க முடியாததால், பொலிசாரை நோக்கித் துள்ளிக் குதித்துப் பாய்ந்துசென்று அவர்களின் றைபிளை மடக்கிப் பிடித்தேன், அண்ணனை அடிக்க வேண்டாம் என்று சிங்களத்தில் கூச்சலிட்டேன். நீங்கள் சிங்களவரா என்று பொலிசார் கேட்க, ‘ஆம்’ என்று சொன்னதும் அண்ணனை அடிப்பதை நிறுத்தினர். அச்சமயம் அங்கு வந்த சப் இன்ஸ்பெக்டர் குருசாமி “அடிக்காதீர்கள்” என்று கூறியபோது “தட்டைத் தமிழா மூடடா வாயை” என்று ஏசிவிட்டுச்சென்றனர். என் தந்தை ஒரு தமிழர்; தாயார் ஒரு சிங்களப் பெண்.”

## 250 பொலிசாரில் நாலில் ஒரு பகுதியினரே தமிழர்

யாழ் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆயுதப் பொறுப்பாளர் சார்ஜன்ட் மனுவேல்பிள்ளை அகஸ்தீன் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் 250 பொலீஸ்காரர்கள் நாலில் ஒரு பங்கினராகஇருந்தனர். ஆகஸ்ட் 15ம் திகதி காலை 6.30 மணிக்கு நான் பொறுப்பை கான்ஸ்டபிள் வீரரத்தினவிடம் பாரம் கொடுத்தேன். அதன் பின் பண்ணையில் உள்ள விடுதிக்குசென்றுவிட்டேன், காலை 8-30 மணிக்கு வாகனம் வந்து பொலிசாரை ஏற்றிச் சென்றது. காலை 9 மணிக்கு பழைய மார்க்கட் கட்டடம் எரிந்து வானத்தில் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. துவக்கு வெடிச் சத்தமும் கேட்டது. நான் விடுதியிலிருந்து பொலீஸ் நிலையத்துக்கு சென்றேன். அங்கே பெரும்பாலான சிங்களப் பொலீசாரைக் காணவில்லை. ஆயுதப்பிரிவிலிருந்து 40 றைபிள்கள் எடுக்கப்பட்டிருந்தன.

## கடமை தவறினர் பொலிசார்

யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசெப் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு சிங்களவரும் தாக்கப்படவில்லை. தமிழ் மாணவர்களே சிங்கள மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தனர். யாழ் அரசாங்க செயலகத்திலும் சிங்கள ஊழியர்களுக்கு தமிழ் ஊழியர்கள் போதிய பாதுகாப்புஅளித்து அனுப்பிவைத்தனர். சிங்கள மாணவர்களை தமிழ் மாணவர்கள் கொன்றுவிட்டதாகவும் நாகவிகாரை சரிந்துவிட்டதாகவும், பௌத்த பிக்குகள் கொலைசெய்யப்பட்டுவிட்டதாகவும் வதந்திகள் பரவியது பற்றி எனக்குத் தெரியும். ஆனல் அவை அனைத்தும் பச்சைப்பொய். அப்படி எதுவுமே நடக்கவில்லை.

“திரு. ருத்திரா ராஜசிங்கம் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியாகப் பொறுப்பு ஏற்றதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். இதேபோல உதவி பொலீஸ் மாஅதிபர் அனேசெனிவிரத்தினவும், யாழ் பொலீஸ் அதிபர் திரு. செனிவிரத்தினவும் நிலைமையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்திருக்கலாம்; பொலிசாரைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்; ஆனல் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. பொலீஸ் அதிகாரிகளுக்கு நடவடிக்கையெடுக்க அதிகாரம் இருந்தது. ஆனல் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

“பழைய மார்க்கட்டில் தீ பிடித்தபோது பொலீசார் அக்கறையின்றிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அணைக்க முயலவில்லை. அணைத்தவர்களையும் தடுத்தனர். பொலிசார் தடைசெய்திரா [illegible] மார்க்கட் தீயை பொதுமக்கள் அணைத்திருப்பார்கள்.

யாழ்நகரத்தில் தமிழர்கள் கலவரத்தை உண்டுபண்ணவில்லை. யாழ்ப்பாண மக்கள் கடைகளை கொள்ளையடிக்கவும் இல்லை; யாழ்ப்பாணத்தில் இருந்த சிங்களவர்கள் ஆகஸ்ட் 17ம் திகதியே யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றுவிட்டனர்.”

## தமிழரைத் தாக்கும்படி சார்ஜன்ட் பண்டாரா ஆலோசனை!

கோப்பாய் பொலீசைச் சேர்ந்தவரும், கலவரநேரத்தில் யாழ் பொலீசில் கடமையாற்றியவருமான கான்ஸ்டபிள்பொன்னையா ராமுப்பிள்ளை தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

“ஆகஸ்ட் 17ம்திகதி காலை 6 30மணிக்கு யாழ் பொலிஸ் நிலையத்துக்கு கடமைக்குச் சென்றேன். காலை 8 30 மணிக்கு ஏ.எஸ்.பி. நூர்தீன் ஜீப்பில்விறுக்கென வந்தார். “கடைவீதியில் மக்கள் தாக்குகிறார்கள்; உடனே சென்று எல்லாத்தமிழர்களையும் சுட்டுத்தள்ளுங்கள்” என்று கத்தினார். நாம் ஜீப்பில் சென்றபோது பஸ் நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. ஒருவர் பயந்து ஓடி, ஜீப்பில் மோதி விழுந்தபோது ஏ. எஸ். பி. நூர்தீன் கீழே இறங்கி அவரை அடித்தார்; உதைத்தார். அங்கு வரும் எல்லோரையும் அடித்து நொருக்கும்படி அவர் கூறினார். மின் நிலையத்தடியில் ஒரு குடுகுடு கிழவர் தாக்கப்பட்டு கீழே விழுந்து துடிதுடித்தார்.

17ம் திகதி இரவு 10மணிக்கு நான் பொலிஸ் நிலைய விறுந்தையில் படுத்திருந்தேன். அப்போது முற்றிலும் சிங்களவர்களை கொண்ட உல்லாசப் பயண பஸ்கள் யாழ் பொலிஸ் நிலையம் வந்தன. கலவர நேரத்தில் தென்னிலங்கை செல்வது புத்திசாலித்தனமா என்று ஆலோசனை கேட்கவே அவர்கள் அங்கு வந்திருந்தனர் அப்போது அவர்களுக்கு சார்ஜண்ட் பண்டாரா பதில் சொன்னார். யாழ்ப்பாணத்தில் பிக்குகள், சிங்களவர், பொலிசார் தமிழ் மக்களால் தாக்கப்பட்டுள்ளதாக சார்ஜன்ட் பண்டாரா அவர்களிடம் கூறியதைக்கேட்டேன். அனுராதபுரம் சென்றபின்னர் நீங்கள் இதற்குப் பதிலடி கொடுங்கள் என்றும் பண்டாரா அவர்களிடம் கூறினார்—அதாவது இங்கு சிங்களவர்களை தமிழர்கள் அடித்ததால் அனுராதபுரத்துக்கு அப்பால் உள்ள தமிழர்களை சிங்களவர்களாகிய நீங்கள் தாக்குங்கள் என்பதே இதன் பொருள்.

## சிவகுமாரன் விளையாட்டுகள்

“யாழ் பொலிஸ் நிலையத்தில் உதவி பொலீஸ் மா அதிபர் ஒரு மாநாட்டை நடத்தினர். அந்த மாநாட்டில், தமிழ்த்தலைவர்கள் — குறிப்பாக திரு. அமிர்தலிங்கம் இளைஞர்களை தவருனபாதையில் வழிநடத்திச் செல்வதாகவும் இதனல் தமிழ் இளைஞர்கள் பலவன்செயல்களில் ஈடுபடுவதாகவும், தற்கொலை செய்த சிவகுமாரன் பல காரியங்களை செய்துள்ளதாகவும். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் பொலிசார் நிதி உதவி செய்வதாகவும் பொய்யான குற்றச்சாட்டுக்களை அடுக்கினர். இந்த மாநாட்டில் கலந்து [illegible] சேர்ந்த திரு.நடராசாவிடம் சிவகுமாரனின் ‘விளையாட்டுக்களை’ பொலிசாருக்கு விளங்கப்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

உடனே நடராசா எழுந்து “யாழ்ப்பாண மேயர் துரையப்பாவின் காருக்கு சிவகுமாரன் குண்டுவைத்துசேதப்படுத்தினர். எஸ். பி. சந்திரசேகராவின் ஜீப்புக்கு சிவகுமாரன் குண்டு விசினர்; கோப்பாய் வங்கியை கொள்ளையடிக்க முயற்சித்தார்” என்றார். சிவகுமார் என்றே இறந்துவிட்டார்.

## தமிழர் பண்பாட்டுக்கு சிங்களவர் பாராட்டு

வட இலங்கை சிங்கள ஆசிரிய சங்க செயலாளரும் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலய ஆசிரியருமான திரு. பியரத்தின குணரத்தின தமது சாட்சியத்தில் கூறியதாவது:

“நானும் நண்பர்களும் மடுக்கோவிலுக்கு சென்றுவிட்டு கிளிநொச்சிவந்து அங்கிருந்து காரில் நாகவிகாரை வழியாக கொக்குவில் நோக்கிச் சென்றபோது, நாகவிகாரைச்சந்தியில் நின்றறைபிள் வைத்திருந்த 15 பொலீசார் எம்மை மறித்து பயமுறுத்தினர்கள். நான் அவர்களிடம் சிங்களத்தில்பேசி, நான் ஒரு சிங்களவன் என்பதை கூறினேன். சிங்கள மகாவித்தியாலயத்தில் படிப்பிப்பதாகவும் வீட்டுத் திறப்பு எடுக்கப்போவதாகவும் கூறினேன். “சிங்களவராக நீ இருக்க முடியாது” என்று கூறிக்கொண்டே ஒரு பொலிஸ்காரன் என்னைப் பிடித்து வெளியே இழுத்தான் தகாத வார்த்தைகளால் ஏசினன். ராஜன் என்ற பெயருடைய என்னுடன் வந்த தமிழ் நண்பர், தனக்குத் தெரிந்த அரைகுறை சிங்களத்தில் மன்றாடினர். தமிழனாக இருந்து கொண்டு சிங்களவனாக நடிக்கப் பார்க்கிறாய் என்றபடி ராஜனுக்குறைபிளால் அடித்தனர். கார் டிக்கிக்குள் கிடந்த தோட்டா பெல்ட்டைக் கண்டுவிட்ட பொலிசார், தமிழருடன் சேர்ந்து பொலிசாரைசுடத்திட்டம் போடுவதாக ஏசினன். பின்னர் தாக்கினர்கள். சிலுவை பொறிக்கப்பட்ட என்கழுத்தில் கிடந்த சங்கிலியைப் பிடுங்கியெடுத்தனர்.

எனக்குத்தெரிந்த-ஒருவர் நாகவிகாரைக்குள்ளிருந்து வெளியே வந்து நான் ஒரு சிங்களவன் தான் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே என்னை விட்டனர். நான் ஒரு சிங்களவன் என்பதை ஏன் முதலிலேயே கூறவில்லையென்றுகேட்டனர்.

சிங்களப் பொலிசார் தமிழர்களை குறைவாக நினைக்கிறார்கள். தற்செயலாகஅன்று நான் ஒரு தமிழ் மகனாக இருந்திருந்தால். என் தலைவிதி எப்படியிருந்திருக்கும் என்று சிந்திக்கிறேன் இங்கு நடைபெறும் விசாரணை விபரங்கள் சிங்களப்பத்திரிகைகளிலும்வெளிவரவேண்டும். அப்போதுதான் இவ்விசாரணையை சிங்களப் பொதுமக்களும் அறிந்து உண்மை நிலையை அறிவார்கள்.

சிங்களவரான எனக்குஎவ்விதபயமும் இங்கு இருக்கவில்லை. இங்குள்ள தமிழர்கள் எவ்விதத்திலும் என்னை குறைவாக நடத்தவில்லை. அதனல்தான் குழப்பநேரத்திலும் நான் யாழ்ப்பாணம் வர விரும்பினேன்.

# தமிழ் ஈழத்துக்..

—1ம் பக்கத்தொடர்

ளின் நல்லாக்கிகளைதெரிவித்ததுடன் அவரிடம் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் குறித்து விளக்கமளித்தார். இதை அரசாங்கத்தினல் தடுக்க முடியவில்லையென்பது மகிழ்ச்சிக்குரியது.

# சுதந்திர இய ..

—2-ம் பக்கத்தொடர்

கொண்ட ஒருமக்கள் இயக்கமாக மாறவேண்டும், மேலேயிருந்து கீழ் நோக்கி வளராமல், கீழேயிருந்து மேல் நோக்கி வளர வேண்டும். மேலேயிருந்து கீழே வளருவது உண்மையான இயக்க வளர்ச்சியல்ல—அது வீழ்ச்சியேயாகும். எனவே அடிமட்டத்திலிருந்து—அத்திவாரத்திலிருந்து இயக்க அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் தலைமைப்பீடம் எந்த ஒரு பிரச்சினையிலும் சாதாரண மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு செயற்பட முடியும்” என்று கூறினர்.

தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின்

## மத்திய செயற்குழுக் கூட்டம்

தமிழ் தொ. சங்கக் கூட்டணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 9ம் திகதி வியாழக்கிழமை பி ப. 5-00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00

அரை ஆண்டு ,, ரூ. 25,00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

“சுதந்திரன்”
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## வியாபாரிகளுக்கு விசேட பரிசு

மில்க்வைற் 72 சவர்க்காரஞ் சுற்றிவரும் உறை50, அல்லது 36 சவர்க்காரஞ் சுற்றிவரும் உறை 100, அல்லது 30 சதம் சவர்க்காரஞ் சுற்றிவரும் உறை 50, அனுப்பி துவாய் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நீயூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதி புதன் கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org